# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

**2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 09 ஆம் திகதிய**
**பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2018. 03. 12 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


## இலங்கை தேயிலைச் சபை (திருத்தம்)

**தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன்பற்றிய கூற்று**

***வாசகம் 2 :*** *இவ்வாசகம், சபைக்கான தொழிற்பாட்டு பணிப்பாளர் ஒருவரை நியமிப்பதற்கெனவும் அதனோடு தொடர்புபட்ட கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்கெனவும் 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபை சட்டத்திற்கு 6அ என்னும் புதிய பிரிவொன்றை உட்புகுத்துகின்றது.*

ச.வ.- ஓ. 27/2017

**தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1**. இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின்   ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டத்தில் 6அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**2**. பின்வரும் புதிய பிரிவானது, (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 6அ எனும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"சபையின் தொழிற்பாட்டுப் பணிப்பாளர்.*

6அ. (1) அமைச்சர், தேயிலைக் கைத்தொழில் துறையில் பரந்த அனுபவம் கொண்ட ஆட்களிலிருந்து 6 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட உறுப்பினர்கள் தவிர்ந்த தொழிற்பாட்டுப் பணிப்பாளர் ஒருவரை சபைக்கு நியமிக்கலாம்.

(2) தொழிற்பாட்டுப் பணிப்பாளர் -

(அ) முழு நேர அலுவலர் ஒருவராக இருத்தல் வேண்டும்;

(ஆ) இலங்கையினுள்ளும் இலங்கைக்கு வெளியேயும் தேயிலைக் கைத்தொழிலின் அபிவிருத்தியை ஊக்குவிப்பதில் தவிசாளருக்கு உதவுதல் வேண்டும் ; அத்துடன்

(இ) சபையின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் உள்ளடங்கலாக சபையின் அலுவல்களை நிருவகித்தல், முகாமை செய்தல் மற்றும் தொழிற்படுத்துதலில் தவிசாளருக்கு உதவுதல் வேண்டும்.

(3) அமைச்சர், தொழிற்பாட்டுப் பணிப்பாளரைப் பதவியிலிருந்து அதற்கான காரணங்களை குறித்தளித்ததன் பின்னர் அகற்றலாம்.

(4) தொழிற்பாட்டுப் பணிப்பாளரின் பதவிக் காலம் நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டுகளைக் கொண்ட காலப்பகுதியொன்றிற்கு இருத்தல் வேண்டும் என்பதுடன், அவர் (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு பதவியிலிருந்து அகற்றப்பட்டாலேயொழிய, மீள நியமிக்கப்படுவதற்கு தகவுடையவராகவிருத்தல் வேண்டும். அத்தகைய மீள் நியமனமானது அடுத்தடுத்து வருகின்றதாயினும் சரி அல்லதாயினும் சரி ஒரு மேலதிக காலத்துக்கு மேற்படாததாகவிருத்தல் வேண்டும்.

(5) தொழிற்பாட்டுப் பணிப்பாளரின் பதவி, இறப்பின் மேல், (3) ஆம் உட்பிரிவின்கீழ் பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மேல் அல்லது அமைச்சருக்கு அதற்கென முகவரியிட்டு அனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் பதவியிலிருந்து விலகுவதன் மேல் வெற்றிடமாகுதல் வேண்டும்.

(6) தொழிற்பாட்டுப் பணிப்பாளர் சுகவீனம் காரணமாக, இயலாமை காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக தமது பதவிக்குரிய கடமைகளை தற்காலிகமாக புரிவதற்கு இயலாதவராக இருக்குமிடத்து, அமைச்சர்

அவரது இடத்தில் செயலாற்றுவதற்கு சபையின் வேறொரு உறுப்பினரை நியமித்தல் வேண்டும்.

(7) தொழிற்பாட்டுப் பணிப்பாளருக்கு, நிதி அமைச்சரினால் வழங்கப்பட்ட இயைபான பகிரங்க தொழில் முயற்சி சுற்றறிக்கையில் குறித்துரைக்கப் பட்டவாறான அத்தகைய ஊதியம் செலுத்தப்படு தல் வேண்டும்.”.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.